# The Morning Star

உதய தாரகை

Registered as a Newspaper (Established 1841) Published Every Friday

Vol. 128 JAFFNA, FRIDAY, 31st MAY, 1968 No. 20

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



**Rates**

*Subscriptions:*

Inland Rs. 15-00 per year

Foreign Rs. 20-00 „ „

Single copy 40 cts. (including postage)

*Advertisement:*

On application

*In Memoriam:*

Rs. 12-50 per insertion (within 4 inches)

*Order Nisi:*

Rs. 15-00 for two insertions (within 6 inches)



**Notice**

*Please Address:*

(1) All Editorial matter (excluding news) for the English pages) to: The Editor. The *Morning Star*, Vaddukoddai.

(2) All news to the News Editor Vaddukoddai.

(3) All Editorial matter for the Tamil pages to: The Tamil Editor, The *Morning Star*, Parsonage, Alaveddy

(4) All Business correspondence *re* Advertisements and Subscriptions and all remittances to:

The Manager, The *Morning Star* — A. Kadirgamar, Esq. College Lane, Vaddukoddai.


### TO ALL OUR SUBSCRIBERS

You have been informed individually about arrears due up to the end of the year 1967. Please check with me if you have any doubts.

1968 subscriptions of Rs. 15/- are payable now. Foreign subscribers pay Rs. 20/-. Please respond favourably.

.Manager

18 — 21

## Calendar of Events

**June 1 — 3:**
Whitsun Festival at the Christa Seva Ashram. Leader: The Rt. Rev. I. R. H. Gnanadasan, Bishop of the Kanyakumari Diocese, C. S. I.

**June 6:**
Seminar on "Holiness" under the auspices of the C. I. S. R. S. at the Ashram, Maruthanamadam at 9 a. m.

**June 9 — 17:**
Children's Week of the J. D., C. S. I.

**June 18:**
Children's Rally (J. D., C. S. I.) at the Old Park, Jaffna.

O

### SERVICE OF THANKSGIVING

A Service of Thanksgiving for the life of the late Mrs. Elizabeth Rasammah Sabapathipillai, the wife of the late Mr. S. S. Sabapathipillai, was held at the C. S. I. Church, Chavakachcheri, last Tuesday, the 28th inst., at 5-30 p. m. It was led by the Rev. J. J. Ratnarajah. The Bible Lesson was read by Miss Nirmala Sabapathipillai, a grand-daughter of the deceased lady. Special songs were sung by members of the family and by Mrs. V. Ariarajah. The Rev. D. C. Ratnasingham preached the sermon and the Rev. K. S. Jeyasingam paid a tribute to the life of Mrs. Sabapathipillai. In the course of his tribute, Mr. Jeyasingam said that she was fortunate to belong to two families which were always very close to the Church — one that of the Lawrences and the other of her husband. He described Mrs. Sabapathipillai as a contented and devoted mother, with great love for the Bible, who gave a careful religious nurture to her children. The service came to a close with prayer and benediction by the Rev. Mr. Ratnarajah.

### NEW DOCTORS

Among those who passed the final M. B. B. S. examination of the Ceylon University are the following: Dr. S. Jeyaseelan and Dr. G. I. Varaprathasan. Dr. Jeyaseelan is a son of the Rev. N. Subramaniam, the Evangelistic Officer of the Jaffna Diocese of the Church of South India and the Tamil Editor of the "Morning Star", and Mrs. Subramaniam of Alaveddy. Dr. Varaprathasan is the elder son of Mr. A. Gunanayagam, retired teacher of Jaffna College and presently teaching in Brunei, and Mrs. Gunanayagam, of Brunei. Both are Old Boys of Jaffna College.

### THE C. L. S. MOBILE BOOK UNIT VISITS JAFFNA

The Mobile Book Unit of the Christian Literature Society of Ceylon, which was got down recently from England, is to pay its first visit to Jaffna from tomorrow till the 10th of June. From the 1st to the 3rd it will be at the Christa Seva Ashram. 5th to 6th at Chavakachcheri, 8th to 10th at Uduvil. On the 4th and the 7th it will visit various schools and other institutions. On the 10th it leaves for Paranthan.

### SECURES Ph. D.

Mr. M. D. Balasubramaniam, formerly of the staff of the Jaffna College Undergraduate Department, has been awarded a Ph. D. in Sanskrit by Poona University. He now is at Kendriya Sanskrit Vidyapeetha, Tirupati — Andra Pradesh, India. He has responsibility for organizing the Research Wing, and supervision of the staff, besides his own programme.

## THINK ON THIS

*I simply argue that the Cross be raised again at the centre of the market place as well as on the steeple of the Church. I am recovering the claim that Jesus was not crucified in a Cathedral between two candles, but on a cross between two thieves, on the town garbage heap; on a crossroads so cosmopolitan that they had to write his title in Hebrew and Latin and Greek; at the kind of place where cynics talk smut, and thieves curse, and soldiers gamble. Because that is where he died and that is what he died about. And that is where churchmen should be and what churchmen should be about.*

**George MacLeod**

### ROMAN CATHOLIC SYNOD / PASTORAL CONVENTION

The Inaugural ceremony of the Roman Catholic Synod and Pastoral Convention, which are meeting for the first time in Ceylon will be held tomorrow — Saturday, the 1st June — at St. Lucia's Cathedral Square, Kotahena, at 5-30 p. m. Religious dignitaries from various denominations have been, we understand, invited to attend this ceremony, which is not a strictly religious function. The main items will be the Opening Address by His Eminence the Cardinal Archbishop and short messages by some of the invited dignitaries.

The first session of the Pastoral Convention is scheduled to be held from the 2nd to the 10th of June. The Convention will consist of the Bishops and 230 priests and lay delegates. They will discuss various documents and resolutions that have already been drawn up by Committees.

The theme before the Convention is: As a Church, Christians must be incarnate in and committed to the Nation. The Convention will also discuss structures for regular dialogue within the Church, "In brief, the Convention is a joint effort of priests and laity to see the Will of God regarding the Church in our times and work out ways and means to fulfil that will."

The inspiration for such a Convention came to the Bishops of Ceylon when they attended in 1965 the sessions of the 2nd Vatican Council. On their return they desired to implement the recommendations of Vatican II in the context of our country. So, when they met in April, 1966, they decided that the best means to achieve this end would be to hold a Synod, an assembly of Bishops and a few others. On the 11th October, 1966, a decree was issued by His Eminence the Cardinal Archbishop of Colombo convening a Synod. That Convocation was a juridical act done strictly according to Canon Law.

His Eminence and the Bishops, however, were not satisfied with a mere juridical assembly. They decided to hold, besides this assembly, an all-island Consultation of representatives of Clergy and Laity. This non-juridical phase is called the 'Pastoral Convention'.

### TRANSFER

Dr. K. Kularatnam, M. A. Ph. D., (Lond.), the former Professor of Geography, University of Ceylon, Peradeniya, is now the Professor of Geography and the Dean of Arts at the University of Colombo.

### PERSONAL

— Dr. A. E. Duraiswamy, of Kuala Lumpur, is now on a holiday in Jaffna. We understand that his chief purpose on this holiday is to celebrate his 80th birthday in his native place, Pungudutivu. A Thanksgiving Service is to be held shortly there.

— Dato R. P. S. Rajasooriya, Barrister-at-Law, is on a short visit to Ceylon. Having spent a brief period in Jaffna, he is now holidaying with his sister, Mrs. Sherrard of Alwis Place, Hendala.

### SERVICE OF INSTALLATION

A special service was held at the Pungudutivu Church (C. S. I) at 5 p. m. last Sunday, the 26th inst., to install its new worker, Mr. S. N. Sugunananthan. The Bishop of the Jaffna Diocese, the Rt. Rev. Dr. S Kulandran was in charge of the service, and was assisted by the Rev. N. W. G. Sugunarajah. The Bible Lessons were read by Mr V. Vijayaratnam and the Rev. Mr. Sugunarajah. The Bishop preached the sermon, in which he gave his charges to the candidate and the Church. Holy Communion followed, celebrated by the Bishop, assisted by the Rev. Mr. Sugunarajah.

At the end of the service a Public Meeting was held in the premises of the Church, presided over by Mrs. Vythilingam, to bid farewell to its former worker, the Rev. D. C Ratnasingham, and its last worker, Mr. S. N. Sinnathamby, and to welcome the new worker. The occasion was also availed of to thank the Rev. K. S. Jeyasingam, who had been its circuit pastor for sometime. A presentation was made to the Rev. Mr. Ratnasingham and Mr. Sinnathamby.

Mr. Sugunananthan had his academic education first at Drieberg College, Chavakachcheri, and then at Jaffna College, Vaddukoddai. From there he went to the Ceylon University, where he secured the B Sc. degree. For a short time he taught in Jaffna College, and then in Trinity College, Kandy. Then for three years he worked as the General Secretary of the Student Christian Movement of Ceylon. He has now finished his three year course of Theological studies in the United Theological College, Bangalore, and sat for his B. D. examination. He is the son of the Rev. and Mrs. N. Subramaniam.

### GONE ABROAD

Mr. Mohan Thambyah, B. A. (Cey.), of Messrs. Messageries Maritimes, Colombo, has resigned his post and joined the Educational Service of Northern Nigeria. He is an Old Boy of Jaffna Central, Jaffna College and Wesley College and a son of Mr. S. E. Thambyah, retired Civil Engineer, C. G. R., and Mrs. Thambyah of "Chandra Giri", Lawton Road, Manipay South and Jaffna.

### DR. D. T. NILES TO GIVE THE OPENING SERMON IN UPPSALA

Geneva — A widely-known Asian Christian leader who preached at the First Assembly of the World Council of Churches twenty years ago will give the opening sermon of the Fourth Assembly this summer, replacing the late Dr. Martin Luther King, Jr., the assassinated U. S. civil rights leader and minister.

The selection of the Rev. Dr. D. T. Niles of Ceylon, Chairman of the East Asia Christian Conference, to fill the vacancy created by Dr. King's death on April 4 was announced here by World Council Officials. The sermon will be on the Assembly theme, "Behold, I make all things new", and will be delivered in the historic Cathedral of Uppsala, Sweden, on the morning of July 4.

Attending the Assembly will be 2,250 Christian leaders from around the world, including 800 delegates from the 232 Protestant, Anglican, Old Catholic and Orthodox Churches belonging to the World Council.

Noting that Dr. King had been chosen [illegible] ability as a preacher, Dr. Eugene Carson Blake, General Secretary of the World Council, said that "Dr. Niles is an outstanding preacher who can give us a thoughtful interpretation of the passage from Revelation that provides the Assembly theme".

A Methodist clergyman and the Chief Executive Officer of the East Asia Christian Conference from its formation in 1957 until his retirement earlier this year, Dr. Niles has been serving for the past two months as a special consultant to the Methodist Board of Missions in New York and teaching at Princeton (N. J.) Theological Seminary. He is a former Secretary of the World Student Christian Federation and served a term as Executive Secretary of the World Councils' Department of Evangelism.

Speaking earlier this year in Bangkok, Dr. Niles said that the search for Church Union is only half of the ecumenical adventure, and added: "The other half of the adventure is the search for forms of belonging together which will provide for human living the discipline of the particular, whether it be a particular articulation of the faith, or a particular commitment to a task, or a particular expression of the fellowship".

Along with the selection of Dr. Niles as the opening preacher, several other programme participants for the Fourth Assembly were announced.

Seven laymen from different parts of the world will share in an opening-night panel discussion, viewing secular events and trends from a Christian perspective.

Each of the laymen will make a brief presentation on how they see God at work in the world renewing society. Featured on the same programme will be a film by a Czechoslovakian team designed to show the "bewilderment and exhilaration" of modern man.

Later in the Assembly, a presentation on human rights will feature the Executive Secretary of the United Nations Economic Commission for Africa, R. K. A. Gardiner, and the Rev. Dr. O. Frederick Nolde, an Associate General Secretary of the World Council and Director of the Commission of the Churches on International Affairs.

The presentation, titled "Human Rights — Retrospect and Prospect", is scheduled for the evening of July 10.

— *World Council of Churches Information.*

Dr. Niles is also the President-elect of the Ceylon Methodist Conference.

### OBITUARY

*Mr. S. C. Gunaratnam*

The death occurred at the Government Hospital, Jaffna, after a brief illness in the late hours of the night of Wednesday, the 22nd inst., of Mr. Samuel Christmas Gunaratnam, retired District Agricultural Officer. He was nearly 74 years of age at the time of his death. A son of the late Mr. S. I. Christmas of Uduvil, he had his education in Madras, where he secured the B. A. degree of the Madras University. For some years he was a teacher in the Jaffna Central College, before he joined the Agricultural Department. He was a very efficient officer, held in high respect by the Government and the people for his integrity of character and desire to serve the public. He was for several years the Principal of the Government Farm School at Tirunelvely, Jaffna, and later became the District Agricultural Officer.

The funeral took place at the "Violet Cottage", Uduvil, where the service was conducted by the Ven. J. A. R. Navaratnam, Archdeacon of Jaffna, assisted by the Rev. R. H. R. Hoole. Special songs were sung by Mr. L. J. D. Mabilrajan and the members of his family. The Archdeacon, in the course of his sermon, paid a tribute to the life and work of Mr. Gunaratnam. He described him as a zealous churchman and one who walked humbly before God. He served the Church lovingly and faithfully to the best of his ability. He was a Warden and the Treasurer of Christ Church, Jaffna, for many years. He was also a representative on the Diocesan Council of Ceylon. Truly it could be said that he gave magnanimous help in all affairs of the Church. In the wide world he had rendered outstanding service as an administrator of the Farm School and as an Agricultural Officer, and later as an officer of the Immigration and Emigration Department. He [illegible] Government for his services with the title of [illegible]. As a person, he was a man of great simplicity and humility. He never lost his temper. He was always conscious of what God had revealed to him. He led a life of honour, integrity and service. The Archdeacon concluded his sermon with the words of Jesus found in the 14th chapter of St. John: "Set your heart at rest; trust in God and also in me".

The remains were then removed to the Christ Church burial grounds, Pannal, Jaffna, where the committal rites were performed by Archdeacon Navaratnam.

The deceased leaves behind, beside his wife Helen Packiam (nee Mann), Vice-Principal, Uduvil Girls' College, a brother — Mr. C. C. Rajah, retired Principal of Mann's English School, a sister — Mrs. Fanny Sugirtham Philipiah, and a host of friends and relatives to mourn his loss.

*Mrs. A. P. Somasundram*

The death occurred on Friday, the 17th inst., at her residence at Karainagar of Alice Pooranam Somasundram, the wife of the late Mr. H. S. Somasundram, of the staff of Memorial English School, Manipay. She was 64 years of age at the time of her death and had been ill for some months. The funeral took place in the afternoon of the next day, the service at the house being conducted by the Rev. N. W. G. Sugunarajah, assisted by the Rev. S. P. Vijayaratnam. The Rev. (Sevak) I. T. Yesusagayam sang a thevaram. The Rev. L. N. Hitchcock preached the sermon. In the course of it he described the deceased as a lady who was always full of cheer, who met life's misfortunes, difficulties and troubles with calm because of her sure faith in her Lord. The remains were then removed for interment at the Karainagar Church burial grounds, where the committal rites were performed by the Rev Mr. Sugunarajah, assisted by the Rev. J. M. Singanayagam.

The deceased leaves behind Mr. V. S. Rajendram, of the Ury Group Hospital, Passara, and Mrs. Rajendram, Mr. S. A. Kulendran, of the staff of the American Mission College, Udupiddy, and Mrs. Kulendran, (sons and daughters-in-law), Messrs. J. Somasundram, of Reckitt and Colman, Mount Lavinia, and Christy Somasundram (sons); Mr. V. Atputhajeyam of the Eastern Paper Mills, Valaichenai, and Mrs. Regina Atputhajeyam, and Mr. V. Tharmaseelan, of the staff of the Memorial English School, Manipay, and Mrs. Thabonithy Tharmaseelan (sons-in-law and daughters); Misses Kamalavathy and Reita Somasundram (daughters); two brothers Messrs. S. T. Sinnadurai, of the Jaffna Co-operative Stores, Ltd., and A. T. Gunaratnam, Managing Director of the United Electricals, Colombo, and a large circle of friends and relatives to mourn her death. Another brother of the deceased, Mr. S. T. Jeevaratnam, of the staff of Jaffna College, predeceased her some years back.

*Mr. P. W. Sinnadurai*

The death occurred last Tuesday, the 28th inst., at his residence at Karainagar of Mr. Paramu William Sinnadurai. He was 78 years of age at the time of his death and had been ill for about a year. He was formerly an Audit Officer in Seramban, Malaya, and had retired from active service in December 1933. The funeral took place the next morning at 7-30, the service at the house being conducted by the Rev. N. W. G. Sugunarajah, assisted by the Rev. N. Kathiravelu. The Rev. S. T. Aseervatham preached the sermon. The remains were then interred at the cemetery of the Karainagar Church, where the committal rites were performed by the Rev. N. W. G. Sungunarajah, assisted by the Rev. N. Kathiravelu.

The deceased leaves behind Messrs. S. Kanagaratnam, of the National and Grindlays Bank. S. Rasanayagam, of Martyn's Road, Jaffna, S. Perinpanayagam, of the Survey Office, Kurunegala, and their wives (sons and daughters-in-law); Mr. S. Gunaratnam, of the Government Hospital, Kegalle, and Ariyanayagam (sons); Mr. Rajakulasingham, R. D. O. Kayts, and Mrs. Rajakulasingham, teacher in the Columbuthurai Maha Vidyalayam, Mr. Jeyarajasingham, of the P. W. D., Maskeliya, and Mrs. Jeyarajasingham, of the staff of St. Joseph's School, Maskeliya, (sons-in-law and daughters); a sister Mrs. Gunanayagam of Karainagar, a brother Mr. P. W. J. Muthiah, retired teacher, Jaffna College, of Kadduday and many friends and relatives who will miss him. Another brother Mr. P. W. Thambiah of Malacca predeceased him some years back, while his wife died exactly one year back, i. e. on the 28th of May, 1967.

IN MEMORIAM

IN EVER-CHERISHED MEMORY

of

OUR DEAR FATHER

**REV. E. K. YESUTHASON**

**Called to rest on 1-6-1959.**

"Thine be the glory, Risen, Conquering Son,
Endless is the victory thou o'er death hast won."

Inserted by his wife and children.

Chavakachcheri,

20

IN MEMORIAM

IN AFFECTIONATE MEMORY

of

**VICTOR ARASARATNAM MANIKKAWASAGAN**

*Called to rest: 5-6-'67*

(A son and a brother too dearly loved to be lost.)

A year has passed, since you left us,
You suffered with courage,
We knew not your pain,
We thought you would get well,
But all was in vain.
Your call was so sudden,
To the garden of rest,
Truly it is said, God takes the best.

Inserted by his ever-sorrowing mother, brothers and sisters.

'Braemar',
Sri Jayanthi Mawatta,
Wattala.

20

## A SEMINAR ON 'HOLINESS'

under the auspices of the Christian Institute for the Study of Religion and Society

at the

**Christa Seva Ashram, Maruthanamadam,**

*on Thursday, 6th June, 1968.*

*Leader:* **The Rt. Rev. I. R. H. Gnanadason, M. A., B. D.**
(Bishop, Kanyakumari Diocese, Church of South India.)

*Programme*

| | |
|---|---|
| 9-00 a. m.: | Biblical Understanding of Holiness |
| 9-45 a. m.: | Discussion |
| 10-30 a. m.: | Tea |
| 10-45 a. m.: | Holiness and the Mission of the Church |
| 11-15 a. m.: | Discussion |
| NOON | Intercession |
| 12-30 p. m.: | Lunch |

*ALL ARE CORDIALLY INVITED.*

C. I. S. R. S.,
Ashram, Chunnakam,
27th May, 1968.

**W. L. Jeyasingham,**
Chairman.

20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிதோறும் வெளிவருவது

# உதயதாரகை

கிறிஸ்தவ வார இதழ்] Estd. 1841 [UTHAYATHARAKAI

மலர் 128 ] 31 — 5 — 1968 இதழ் 20

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்த ஜனத்துக்கும் இழிவாம்."

## விசேட நிகழ்ச்சிகள்

யூன் :

1 - 8 ஆச்சிரமத்தில் பெந்தக்கொஸ்தே விழா

9 - 17 தெ. இ. ச. பிள்ளைகள் வாரம்.

18 தெ. இ. ச., யாழ். அத்தியட்சாதீன பிள்ளைகள் விழா.

## தீவுப்பற்றுச் சுவிசேஷ சங்க விழா

இம்மாசம் 25 ஆம் திகதி சனிக்கிழமை உடுவில் தேவாலயத்தில் மேற்படி விழா நடைபெற்றது. காலை 8-00 மணிக்கு நடைபெற்ற திருவிருந்தாராதனையை மறைத்திருவாளர்கள் எஸ். தம்பு, கே. எஸ். ஜெயசிங்கம், என். டபிள்யு. ஜி. சுகுணராசா நடத்தினர். திரு. எஸ். என். சுகுணானந்தன், மறைத்திரு சுகுணராசா வேதப்பாடங்களை வாசித்தனர். மறைத்திரு. சாமுவேல் மணிக்கம் அருளுரை வழங்கினர்.

காலை 10 மணிக்கு நடைபெற்ற சுவிசேஷக் கூட்டத்துக்கு திரு. ஆர். சி. எஸ். குக் தலைமை தாங்கினர். அவர் தமது தலைமையுரையில் 1905 இல் உருவான சுதேச சுவிசேஷ சங்கம் தென் இந்தியாவுக்கே முன்னோடியாக விளங்கியது; முன்னோர் நட்ட பயிர் விருத்தியாக்கப்பட வேண்டும்; எல்லாருமே பங்குகொண்டு வேலை வளர உதவ வேண்டும் என்றார். மறைத்திரு. சாமுவேல் மாணிக்கமும், மேஜர் ஜே. தேவசகாயமும் பேச்சாளராயமைந்தனர்.

உயர்மறைத்திரு ச. குலேந்திரன் அவர்களது செப ஆசீர்வாதத்துடன் 12 மணி போல் கூட்டம் முடிந்தது.

## ஆட்கள்

உயர் மறைத்திரு. ஐ. ஆர். எச். ஞானதாசன் அவர்கள் (கன்னியாகுமரி அத்தியட்சர்) யாழ்ப்பாணம் வந்துள்ளார். அவர் ஆச்சிரமத்தில் நடைபெறும் பெந்தெக்கோஸ்தே விழாவில் சிறப்புரைகள் நிகழ்த்துவார். யூன் மாசம் 6 ஆம் திகதி கிறிஸ்தவ மார்க்க, சமூக கலைக்கூட ஆதரவில் ஆச்சிரமத்தில் நடைபெற விருக்கும் "தூய்மை" பற்றிய கருத்தரங்கில் தலைமைதாங்குவர். சில சபைகளில் எழுப்புதற் பிரசங்கங்கள் செய்வர் எனத் தெரிகிறது.

○

திரு. எஸ். பி. ஜெயசிங்கம் உசன் சபை ஊழியனாக 2-6-68 மாலை நியமனம் பெறுவாரெனத் தெரிகிறது. இவரது நியமனப் பிரதிஷ்டை ஆராதனை உசன் தேவாலயத்தில் அன்றுமாலை நடைபெறும். இவர் காலஞ்சென்ற திரு. தேவநேசன் பாலசிங்கம் செல்வத்துரையின் மகனுவர். பங்களூர் இறையியற் கல்லூரிப் படிப்பு முடித்து வந்துள்ளார் இவரது ஊழியந் தழைத்தோங்க இறையருள் கிட்டுவதாக.

## சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர்கள் வேலை நீக்க உத்தரவு

சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் சிலரை வேலையிலிருந்து நிறுத்திவைத்தது சம்பந்தமாக அவர்கள் வடமாநில வித்தியாதிபதிக்கு முறைப்பாடு செய்ததன் விளைவாக இவ்வருட முற்பகுதியில் நடைபெற்ற விசாரணையின் போது வித்தியாதிபதி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலை நீக்க அறிக்கை சட்டபூர்வமானதல்ல என்றும் அப்படி அறிக்கை கொடுப்பதற்குத் தகுதி வாய்ந்த அதிகாரி கல்லூரிச் சொந்தக்காரரேயன்றி கல்லூரி மனேஜரல்லவென்றும் தீர்ப்பளித்தார்.

இத்தீர்ப்பை எதிர்த்துக் கல்லூரி நிர்வாகிகள் கல்வி மாஅதிகாரிக்கு விண்ணப்பித்தனர். அவர் விஷயத்தை அட்டர்னி ஜெனரலின் ஆலோசனைக்கு ஒப்படைத்தார்.

அட்டர்னி ஜெனரல் மனேஜரின் வேலைநீக்க அறிக்கை சட்டபூர்வமானதே எனத் தீர்ப்பளித்தார். இதுபற்றிய விசாரணை விரைவில் நடைபெறுமென வடமாநில வித்தியாதிபதி ஆசிரியர்களுக்கும் மனேஜருக்கும் அறிவித்துள்ளார்.

## சட்ட விரோதமாம்

வார மொன்றுக்கு ஜி. சி. ஈ. சாதாரண உயர்தர வகுப்புகளில் தாம் படிப்பிக்கும் பாடங்களிலும் அவற்றுடன் தொடர்பான பாடங்களிலும் 15 மணித்தியாலங்கள் போதிக்காத பட்டதாரி ஆசிரியர், பட்டதாரிச் சம்பளம் பெறத் தகுதியற்றவர்களாவர். எனக்கூறும் கல்வியமைச்சின் சுற்றுநிருபம் ஒன்று சட்டவிரோதமானது என்று யாழ்ப்பாணப் பிரபல வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்துள்ளாராம்.

ஆசிரியரின் சம்பளத்தை நிர்ணயிக்கும் விஷயங்கள் சுற்று நிருபங்களுக்கு அப்பாற் பட்டவை யென்றும், அவ்வாறு எப் பட்டதாரி ஆசிரியருக்காவது சம்பளம் குறைக்கப்பட்டால் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்து நிச்சயமாக வெற்றிபெறலாமென்றும் அவர் அபிப்பிராயம் தெரிவித்திருப்பதாகவும், இதுபற்றி ஆசிரியர் சிலர் ஆலோசனை செய்து வருவதாகவும் அறியப்படுகிறது.

## நினைவு கூர்தலாராதனை

திருமதி எலிசபெத் இராசம்மா சபாபதிப்பிள்ளை

சென்ற செவ்வாய்க்கிழமை (28-5-68) மாலை 5-30 மணிக்கு சாவகச்சேரித் தேவாலயத்தில் மறைத்திரு ஜே. ஜே. இரத்தினராசா தலைமையில் காலஞ்சென்ற திருமதி ஈ. ஆர். சபாபதிப்பிள்ளை பேரில் ஒரு நினைவுகூர்தலாராதனை நடைபெற்றது.

செல்வி நிர்மலா சபாபதிப் பிள்ளையின் வேதப்பாடமும், குடும்பத்தாரின் சிறப்புப் பாடலும், திருமதி எம். ஜே. அரியராசாவின் சிறப்புப் பாடலும் இடம்பெற்றன. மறைத்திரு டி. சி. இரத்தினசிங்கம் அருளுரை வழங்கினர். மறைத்திரு கே. எஸ் ஜெயசிங்கம் பாராட்டுரை வழங்கிய போது அம்மாளின் அன்பு, சபைக் கரிசனை, நற்குணப் பண்பு ஆகியவைகளைக் குறிப்பிட்டு லோறன்ஸ் குடும்பமும் சபாபதிப்பிள்ளை குடும்பமும் சபைவாழ்வில் முன்மாதிரியாய் விளங்கியவாறு பிள்ளைகளுமிருக்கக் கேட்டுக்கொண்டனர்.

## 250 பெண் பொலிஸார்

250 பெண்பொலிசாரை புதிதாகத் திரட்டுவதற்காக அரசாங்கத்தின் அனுமதியைக் கோருவதற்குப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபய குணவர்த்தன தீர்மானித்துள்ளார்.

## இரும்பு போன்ற கடினமான பிளாஸ்டிக்

இரும்பு போன்ற உறுதி வாய்ந்த ஒருவித பிளாஸ்டிக் பொருளை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இப்பொழுது உலோகங்களினால் செய்யப்படும் பல்வேறு இயந்திர உபகரணங்கள் இனி இந்தப் புதிய பிளாஸ்டிக்கினால் செய்ய முடியுமென இந்த விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

## மறுமைப் பிரவேசம்

பாமு உவில்லியம் சின்னத்துரை

காரைநகர் சபையைச் சேர்ந்தவரும் இளைப்பாறிய (மலாயா) கணக்குப் பரிசோதகருமான திரு. பி. டபிள்யூ. சின்னத்துரை தமது 78ம் வயதில் கடந்த செவ்வாய்க்கிழமை (28-5-68) மறுமைக்குள் பிரவேசித்தனர். இவர் திருமதிகள் இராசகுலசிங்கம், ஜெயராசசிங்கம், திருவாளர்கள் கனகரத்தினம், இராசநாயகம், பேரின்பநாயகம், குணரத்தினம், அரியநாயகம் ஆகியோரின் தந்தையும் இளைப்பாறிய யாழ்கல்லூரி ஆசிரியர் திரு. பி. டபிள்யு. முத்தையாவின் சகோதரனுமாவர்.

மறுநாள் காலை 7-30 மணிக்கு மறைத்திருவாளர்கள் என். டபிள்யு. ஜி. சுகுணராசா, என். கதிரவேலு ஆகியோரால் நடத்தப்பட்ட சேமாராதனையில் மறைத்திரு எஸ். ரி. ஆசீர்வாதம் அருளுரை வழங்கினர்.

காரைநகர்ச் சேமக்காலையில் மறைத்திருவாளர்கள் சுகுணராசா, கதிரவேலு ஆகியோரால் நல்லடக்கஞ்செய்யப்பட்டார்.

இவரதுபிரிவாற் றுயருறுவோருக்குத் தேவதேற்றரவு கிட்டுவதாக.

## குடிநல — சுகாதார வார விழா

27-5-68 காலை யாழ்ப்பாண மாநகர சபை முன்றிலில் கௌரவ ஊள்ளூராட்சியமைச்சர் கொடியேற்றி விழாவை ஆரம்பித்தனர். அவரை வரவேற்றுப் பேசிய உள்ளூராட்சி ஆணையாளர் திரு. முருகவேள், இலங்கையில் முதன் முதலாகக் கொண்டாடப்படும்' இவ்வாரம் மறு நகரங்களுக்கும் முன் மாதிரியாகும்' நமது நகரம், நமது பொருள், நமது கடமை என்ற உணர்வோடு, பண்புடனும் பிறர் நலவிருப்போடும் மக்கள் நடந்து வீணானபணச் செலவை மீதப்படுத்தி அபிவிருத்தி வேலைகளுக்கு உபயோகமாகச் செய்ய வேண்டுமென மக்களைக் கேட்டுக் கொண்டனர்.

இவ் விழாவுக்குக் காரணராய் விளங்கிய பேராசிரியர் திரு. கே. நேசையா அவர்கள் நகரத்தின் பழமையை மக்களறிய வேண்டும்; அழகுபடுத்தவேண்டும்; ஒத்துழைக்க வேண்டும் என்றார். சரித்திரப் புதையலான இந் நகர் சம்பந்தமான மூன்று வேண்டுகோள்களை அமைச்சர் முன் அவர் வைத்தார். நகர விஸ்தரிப்புத் திட்டம் ஒன்று வேண்டும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சங்கிலித் தோப்பு பாதுகாக்கப்பட வேண்டும். பழைய கச்சேரியுள்ள 'பழைய பூங்கா' (Old Park) பொதுமக்கள் பூங்காவாக வேண்டும்.

அடுத்து வடமாகாண அதிபர் குடிநல சுகாதார வார நிர்வாகிகளைப் பாராட்டி தம் இயன்றமட்டும் ஒத்துழைப்பு நல்க வாக்களித்தனர். செய்தவைகள் செய்ய வேண்டியவைகளை ஆராயவும், சுகாதாரப் பழக்கத்தை வளர்க்கவும், போஷாக்குள்ள உணவு பயிரிடவும், தொற்று நோய்களை அகற்றவும் இவ்வாரம் பயனளிக்கும் என்றார்.

கௌரவ அமைச்சரவர்கள், தமிழ், சைவம் வளர்ப்பதில் யாழ்ப்பாணம் முன்னோடியானது; தண்ணீர் வசதிக்கானவைகள் ஆராயப்படுகின்றன; தண்ணீர் வசதி பெற்றதும் நகரம் விஸ்தரிக்கப்பட்டு மண்டைதீவு நகரின் பாகமாகலாம்; மாநகர சபைத் தேர்தல் விரைவில் நடைபெறும்; தெரியப்படுவோர் நேர்மையுடன் நடந்து இதனைச் சிறந்த நகராக்க வேண்டும். மாவட்டசபை வந்தபின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பேணும் பொறுப்பு அதனுடையதாகும் என்றார்.

திரு. சித்தி கனகரத்தினத்தின் பொருளும் சுவையும் மிக்க [illegible] நன்றியுரை வழங்கப்பட்டது.

## நன்றி நவிலல்

அண்மையில் நடந்தேறிய எங்கள் விவாக வைபவத்தில் பங்கு பற்றி, எங்களைப் பெரிதும் மகிழ்வித்தேகிய கனம் அத்தியட்சர், சபைகளின் ஊழியர், உறவினர், நண்பர் யாவர்க்கும், அனேக விலை பெற்ற பொருள்களை மண வாழ்க்கைச் சின்னங்களாக ஈந்தோர்க்கும், திருமண ஆசி கூறி ஏராளமான தந்திச் செய்திகளனுப்பிய நண்பர்களுக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றி.

மேலும்; தனித்தனியாய் நன்றி நவில்தல் சற்றும் இயலாத காரியமாகையால் இத் தாரகை விளம்பரத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்
மனோகரன் தம்பதிகள்
ஏழாலை வடக்கு

## விற்பனைத் தொழிலுக்கு இயந்திர "மனிதன்"

வர்த்தக ஸ்தாபனங்களின் விற்பனையாளராகப் பணி புரியக் கூடிய ஒரு இயந்திர மனிதனைப் பிரிட்டிஷ் பொறியியல் விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கிறார்கள். இந்த இயந்திர "மனிதன்" மதிநுட்பம் வாய்ந்த ஒரு விற்பனையாளர் போல் வாடிக்கையாளரைக் கவரும் வகையில் அதிசய சாதனைகளைப் புரியும் அபார சக்தி வாய்ந்தது.

ஒரு வாடிக்கையாளர் விற்பனைப் பகுதிக்கு பிரவேசித்ததும், இந்த இயந்திர "மனிதன்" அவர் வருகையை உடன் ஊகித்துணர்ந்து கொள்கிறது. பின்பு அங்கு காட்சிக்கு வைக்கப் பட்டிருக்கும் பொருள்கள் பற்றி எடுத்துவிளக்க ஆரம்பித்து விடுகிறது. இந்த இயந்திர மனிதனுள் இணைக்கப்பட்டிருக்கும் ஒலிப்பதிவுக் கருவிகள் தன்னியக்கமாக இந்தக் காரியத்தைச் செய்துவிடுகின்றன. பொருள்களின் தன்மை, பிரயோகம், சிறப்பம்சம், மற்றும் விலை போன்ற சகல விபரங்களையும் இந்த மனிதன் எடுத்துக் கூறிவிடுகிறது. அதுமாத்திரமன்றி காட்சியிலுள்ள பொருள்களை இயக்கிக் காண்பிக்கும் ஆற்றலும் அதற்குண்டு. உதாரணமாக, ஒரு விற்பனை அரங்கில் ஒரு புதிய கார் காட்சிக்கு வைக்கப்படிருக்கிறது என்றால் அந்தக் காரின் இயந்திர அமைப்பை விளக்கிக் கூறி, கதவுகள், போனட் போன்றவற்றைத் திறந்து காண்பித்தது, ஒரு சிறந்த விற்பனையாளர் செய்யும் சகல காரியங்களையும் இந்த இயந்திர "மனிதன்" செய்துவிடுகிறது.

லண்டனிலுள்ள பிரபல பொறியியல் நிறுவனமான பிரிட்டிஷ் லிபர்ட்டி கொண்ட்ரோல் கம்பனி இந்த இயந்திர அமைப்பை உருவாக்கியுள்ளது. சமீபத்தில் செல்தென்ஹாம் நகரில் நடைபெற்ற பொறியியல் கண்காட்சியில் இந்த "இயந்திர மனிதன்" ஒரு முக்கிய பங்கு வகித்தது. நவீன மயமாகிவரும் வர்த்தகத்துறையில் இந்த 'இயந்திர' விற்பனையாளர் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்துள்ளது.

## நேரு சமாதானப் பரிசு

நேரு சமாதான பரிசு இம்முறை காலஞ்சென்ற நீக்ரோத் தலைவர் மார்ட்டின்லூதர் கிங்கிற்கு அவர் மரணமான பிறகு வழங்கப்பட்டுள்ளது.

இப்பரிசை ஏற்றுக்கொண்டு அதற்கு நன்றி தெரிவித்து திருமதி கிங் இந்திய அரசாங்கத்துக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

அடுத்த வருடம் நடைபெறும் ஒரு விசேஷ நிகழ்ச்சியின்போது திருமதி கிங் இந்தியாவுக்கு வந்து பரிசைப் பெற்றுக் கொள்வார். பரிசைத் தாம் ஏற்றுக்கொள்ள முடிவு செய்ததற்கான காரணத்தைப் பிறகு தெரிவிப்பாராம். அந்நிய செலாவணியாக மாற்றக் கூடிய ஒரு லட்சம் ரூபாயும் பாராட்டுப் பத்திரங்களும் பரிசாக வழங்கப்படும். 1962 ஆம் ஆண்டில் இத் தப் பரிசு முதல் தடவையாக ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்டுக்கு வழங்கப்பட்டது.

## உலகில் மிகப் பெரிய நூல் அச்சாகிறது

உலகிலேயே மிகப் பெரிய புஸ்தகம் பிரிட்டனில் அச்சாக ஆரம்பித்திருக்கிறது. அதுதான் [illegible] நூலக பேரவையின் புதிய நூல்விபரப் பட்டியல் தொகுப்பாகும்.

இந்தப் பிரமாண்டமான நூலின் எடை ஒன்றரைத் தொன்களாக இருக்கும், இதனை அச்சடித்து முடிப்பதற்கு 10 ஆண்டுகள் செல்லும். ஒவ்வொன்றும் 704 பக்கங்களைக் கொண்டு 610 தொகுப்புகளைக் கொண்டதாக இந்நூல் விளங்கும்.

இந்தப் பட்டியல் தொகுப்பு நூலில், அமெரிக்காவிலும், கனடாவிலுமுள்ள 2,000 வாசிகசாலைகளிலிருக்கும் 12,000,000 நூல்களின் விபரங்கள் கொடுக்கப்படுகிறது.

## பொற்குணம் எனக்கு அளிப்பாயே!

"ஜெயம்"

சிறியோர் செய்யுஞ் சிறுபிழை எல்லாம் சீருடன் மன்னித் தருள்வாயே
பெரியோர் நீயே பெற்ற தாயும் பேரும் புகழும் ஆவாயே!
ஒருவாய் சோறும் இல்லா போதும் ஒப்புயர் வற்று வாழ்ந்திடவே
அருள்வாய் நல்ல ஒழுக்கம் அன்பு அடக்கமோடு நற்குணமே!

திருவாய் நீயே வருவாய் எந்தன் திசையறியாத உள்ளமதில்
கருவாய் உன்னை ஏற்றுக் கொண்டு கண்ணியமாய்நாம் வாழ்ந்திடுவேன்
வருவாய் இருந்தாலும்நான் தெருநாய் வலமாய் வந்தாலும் யானே
பெறுவாய் வெற்றி பேருடன் வாழ பொற்குணம் எனக்கு அளிப்பாயே!

அறிவாய் எந்தன் உள்ளம் அதனால் அன்பாய் என்னைப் பார்ப்பாயே
கரிவாய் போன கரும்பாய்நானும் கனிவாய் உன்னை ஆவேனே!
நரிவாழ் குகையில் நானதலை வைத்து நாளும் படுக்க நேர்ந்தாலும்
புரிவாய் அருளே பெங்குணத்துடனே புவிமேல் நாளும் வாழ்ந்திடவே!!

## பயிரை உண்ணும் வேலிகள்



முத்தர்: 'ஆபாசமான செய்திகளைப் பிரசுரஞ் செய்து, அநியாயஞ் செய்யும் பத்திரிகைகளையும், அப்பத்திரிகைகளை ஆதரிக்கும் ஆதரவாளர்களையும் எதற்கு ஒப்பிடலாம்?'

சித்தர்: பச்சைப் பசேலென, படர்ந்து, நிமிர்ந்துநின்று — பூத்துக் குலுங்கிப் (பயன தரும) பழந்தரும் பசுமரத்தை, உண்டு ஏப்பமிட்டு அழிவு செய்யும் பாதுகாப்பு வேலிக்கு ஒப்பிடலாம்!

## தெருப் பேச்சு

⊙ "ஆபாசமான செய்திகளைத் தடித்த எழுத்துக்களில பததிரிகைகளில் பிரசுரஞ் செய்வது நிறுத்தப்படவேண்டும். இதனல் மாணவ மாணவியர் ஒழுக்கம் பாதிக்கப்படுகிறது பத்திரிகை ஆசிரியர்களை இதுபற்றிக்கேட்க வேண்டும்" என்று யாழ்ப்பாணம சைவ பரிபாலன சபையினது 79வது வருடாந்தக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறறப் பட்டதாம்! இந்த மகிழ்ச்சி தரும் செய்தியைக் கேட்டதும பலர் இதைச் செயற்படுத்த வேணடும என முனைந்துள்ளாரகளாம! "பததிரிகைகளுக்குப் பாடம் கற்பிக்கும் வாரம்" என ஒரு வார காலத்தை ஒதுக்கி, ஒருபெரும இயக்கத்தை நடாததும முயற்சகள் பறறி சநதிகளில பேசப்படுகின்றன. பததிரிகைகளில தரமான செயதிகள வரவேணடும. ஆபாச செய்திகள வெளிவநதால, பத்திரிகைகளுக்குப் பாடங் கற்பிக்கும வாரததில, நல்ல திட்டஙகளாக வையாண்டு வேணடியன செயய "எதிர்காலம எமதே" எனக்கூறிக்கொள்ளும் இளைஞர் படை ஒன்று திட்டமிட்டுகின்றதாம.

⊙ உண்மையான இலக்கியத்தைப் படைக்கவேணடும என்னும் அவா இன்றி, பததிரிகைகளில வெளிவநதால போதும என்று எண்ணும எழுததாளர்களும எம்மததியில் இருக்கிறார்கள் என ஒரு அறிஞர் கவலைபபடுகிறார். இதற்கு மாறாக எவ்வ என்று சிலர் கேட்கிறார்கள்.

⊙ எதிர் வரும் வருடங்களில் தமிழினம கலைத்துடனும், நிதானத்துடனும் இருத்தல வேணடுமாம. "மாவட்ட சபையும், பாவனை பொருட் பாதுகாப்புச் சட்டமும்" தமிழினத்துக்கு இருபெரும அபாயங்கள் என்று கடன்மையின சனசமூக நிலைய வருடாந்த விழாவில ஒரு தமிழ பாதுகாவலர் முழங்கியுள்ளார். இதுமட்டும் தமிழ மக்களுடன் சிலர, தலைவர்களும், தமிழ்ப பத்திரிகைகளும் வழிப்பாயுகதால போதும. அவர்கள் தூங்கிவிடக்கூடாது. என்று பேசிக்கொள்கிறார்கள, சொல்லுதல யாவர்க்கும் எளிது.

— "காவல் குரு"

## எனக்கு உங்கள் பணம் தேவையில்லை

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

டையும் என் பணத்தையும் வைத்துக் கொள்ளலாம்" என்றார் மருத்துவர்.

இதைக் கேட்டதும் ஜானுக்குத் திகைப்பு உண்டாயிற்று. அதற்கு நன்றி சொல்லவும் அவன் வாய் தடுமாறிற்று. எஜமான் கொடுத்த வாக்கு அவனைத் திடுக்கிடச் செய்தது. அவன் படுக்கையிலிருந்த போது, தான் பெரிய வீட்டிற்கும் நிலத்திற்கும் உரிமை கொண்டாடப் போகிறோம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். பின்னர் "ஏன் என் எஜமான் ஆஸ்தியை எனக்குக் கொடுக்கிறார்?" என்று ஆழ்ந்த எண்ணினான். திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை வந்தது.

"கர்த்தர் வந்த பிறகு எனக்கு ஏன் வீடு, மோட்டார் வண்டி, பணம், தட்டுமுட்டுச் சாமான்கள்? எஜமான் ஆஸ்தி எனக்கு இருந்த போதிலும், நான் பூமியிலே விட்டு விடப்படுவேனானால் அது எத்தனை பயங்கரம்?"

இந்த எண்ணம் அவனால் தாங்கக் கூடவில்லை. நள் இரவில் எழுந்து, தன் எஜமான் படுத்திருந்த அறைக்குப் போய்க் கதவைத் தட்டினான்.

மருத்துவர், "ஜான் என்ன? என்ன விஷயம்? உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

ஜான் "ஐயா, கர்த்தர் வந்த பிறகு உங்கள் வீடோ, சொத்தோ, எதுவும் எனக்கு வேண்டாம்" என்றான்.

"அப்படியா? உண்மையா?"

"ஐயா! எனக்கு உங்கள் பணம் ஒன்றும் வேண்டாம்"

"சரி அப்படியானல் உனக்கு என்ன தேவை?"

"ஐயா, ஆண்டவர் வரும் போது அவரோடு ஆகாயத்தில் போக நான் என்ன ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும்:"

மருத்துவர் இதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி யடைந்தார். அவனை உள்ளே அழைத்துச் சென்றார். அவனுக்குக் கடவுள் நம்மை எவ்வளவாய் நேசிக்கிறார் என்றும், அதற்காகத் தேவ குமாரனைப் பூலோகத்திற்கு அனுப்பினார் என்றும், நம்முடைய பாவத்தைப் போக்க அவர் சிலுவையில் மரித்தாரென்றும் விளக்கிக் காட்டினார். அவரை விசுவாசிக்கிறவர்கள் யாவரும் இரட்சிக்கப் படுவார்கள், என்னும் சத்தியங்களைப் பற்றிப் பேசியபின், அவர்கள் இருவரும் வேதாகமத்தைத் திறந்து யோவான் 1:12 வாசித்தார்கள்: "அவர்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்."

ஜான் முகத்தில் ஒளி பிரகாசித்தது. அவர்கள் இருவரும் இருந்த இடத்திலேயே, மருத்துவரின் படுக்கை அறையில், முழங்காற்படியிட்டு ஜான் தேவைக்காக ஜெபித்தனர். அப்போது ஜான் இரட்சிக்கப்பட்டான். இரட்சகர் பால் தன் நம்பிக்கையை வைத்தான்.

இறுதியில் அவன் இயேசுவுக்குச் சொந்தமானன். இயேசு கிறிஸ்து, தம் பக்தர்களுக்காக ஆகாயத்தில் வரும்போது ஜானும் ஆயத்தமானன். அந்த மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான்.

உன்னைப் பற்றி என்ன? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சந்திக்க நீ ஆயத்தமாயிருக்கிறாயா? அப்படியானல் இன்றே அவருக்கு உன்னை அர்ப்பணித்துவிடு.

— நல்ல சமாரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயதாரகை
UTHAYATHARAKAI

1968 ஆம் ஆண்டு மே மீ 31 ஆம் நாள்

# மாவட்ட சபை படுத்தும் பாடு

ஒருவனுக்கு அமுதாயிருப்பது வேறொருவனுக்கு நஞ்சாவது இயல்பு. எந்தக் காரியமும் அப்படியே. இன்றைய இலங்கை அரசியல் நடபடிகளும் அப்படித்தான் காணப்படுகின்றன.

மாவட்ட சபையை விரும்புவாருமுண்டு; வெறுப்பாருமுண்டு விருப்பு வெறுப்பு பொதுநல நோக்கோடெழுந்தனவென்று சொல்லிவிட முடியாவிட்டாலும் அதை நன்மையாகக் காண்பாரும் உண்டு; பெருந் தீமையாகக் காண்பாருமுண்டு. சிங்களவர் தமக்காகாதென்றும் தமிழர் தமக்குதவாததென்றும் பேசி வருகின்றனர். சிலர் அதைப் பின்போடவும் முற்றாகக் கைவிடவும் வேண்டுகின்றனர்.

தேசிய அரசாங்கம் உருவான போது மாவட்டசபை ஏற்படுத்துவது அதன் குறிக்கோளில் ஒன்றாயமைந்தது. அது புதிய காரியமாயல்ல, இலங்கை அரசியல் மேதையாகப் பாராட்டப்பட்டுவரும் பண்டாரநாயக்கா அவர்களின் பழைய திட்டமேயாகும். அவரது திட்டத்தில் பாதிதானுமில்லாத ஒருவகை மாவட்ட சபைகள் வரவிருக்கின்றன.

இந்த நிலையில் சிங்களவர் அஞ்சவேண்டிய தேவையில்லை. நாடு பிளந்துவிட வழிபிறக்கும்; தமிழ்ப் பிரதேசங்களிலிருக்கும் சிங்களவர் அல்லற்பட நேரும் என அவர்கள் காரணங் கூறுகின்றனர். சிங்களப் பிரதேசங்களில் வாழும் தமிழர் நிலை அவர்கள் கவனத்திலிருப்பதாயோ, இலங்கையின மொழிக் கொள்கை அமுலாக வேண்டுமென்ற எண்ணம் இருப்பதாயோ காணமுடியவில்லை.

தமிழருக்குப் போதிய உரிமையில்லை. தமிழ்மொழி உபயோகம் ஆக வடக்கு, கிழக்கு மாகாணங்களில்தான் இருக்கப்போகிறது; தமிழருக்குப் பெருநட்டம் எனத் தமிழர் பேசுகின்றனர். மொழிக் கொள்கை சரியாக அமுல் நடத்தப்பட்டால் இவ்வச்சம் ஆதாரமற்றது. ஆனால் அதிகாரமற்ற மாவட்டசபைகளால் பயனில்லையென்பது வரவேற்கத் தக்கது. அதிகாரங்கள் கூடிக்குறைய வழி பிறக்கலாம்; பிறக்கச் செய்யலாம்.

இவற்றையெல்லாம் கவனித்தால் அரசியல்வாதிகளின் நோக்கம் நிறைவேற மாவட்ட சபை பயன்படுத்தப்பட்டு வருகிறதென்பது வெளிப்படை. அப்பாவிப் பொதுமக்கள் அவர்களின் பகடைகளாகி அநுவசியமாய்த் துவேஷ மனப்பான்மையை வளர்த்து வருகிறார்கள். நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படலாமென்ற அச்சமும் எழுகின்றது.

இதனால் சிலர் மாவட்டசபை விஷயத்தைப் பின்போடுமாறு பிரதமரை வேண்டுகின்றனர். வேறு சிலர் அதைக் கைவிடுமாறு ஆலோசனை கூறுகின்றனர். ஆனால் தேசிய அரசின் முடிவு சிக்கலாகியுள்ளது. மாவட்ட சபை ஏற்படுத்துவது அதன் அரசியற் கொள்கைகளில் ஒன்று. அதை ஏற்படுத்துவதனால் நாட்டின் அமைதிக்குப் பங்கம். அப்படியானால் பின்போடலாமா? கைவிடலாமா?

நாட்டுக்கு நலமும் தேவையுமானதானால், அரசியல் நன்மையுடையதானால் தயங்க நியாயமில்லை. அப்படியில்லையெனில் — நன்மை தீமை தெரியக்கூடிய நிலையில் இல்லை — கைவிடுவது அவசியம். மாவட்ட சபை மசோதா வந்தபின்பே இது வெளியாகும்.

ஆனால் பொதுமக்கள் அரசியல் வாதிகளின் தந்திரப் பேச்சுக்கும், அபத்தமான வார்த்தைகளுக்கும் அடிமைகளாகிப் பொதுநல தேவைகளில் எதிர்த்து நிற்பது விரும்பத் தக்கதல்ல. குரோத மனப்பான்மை வளர இடமளிப்பதும் புத்தியல்ல.

"மாவட்டபுரம் கதவடைக்க மாவட்ட சபை ஏன்" என்று கேட்பவர்களையும், "வாலிபர் தெருவளக்க திரு......மந்திரியாயிருப்பதா?" என்று கேட்பவர்களையுங் காண்கிறோம். கதவடைக்கக் காரணர் திரு...வும் அவர் சகாக்களுமா? அன்றி வாலிபர் தெருவளப்பது திரு...வாலா? சொல்வது யார்க்கும் எளிது. உண்மை உணரப்பட்டாக வேண்டும். பாமரரை ஏமாற்றும் பகட்டு வார்த்தைகள் உதவா. பயன்தரா.

எனவே மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்களும் நாட்டு முன்னேற்றத்தில் நாட்டமுள்ளவர்களும் நலமானதை உணரவும் நிறைவேற்றவும் எப்போதும் முன்னிற்கவேண்டும். பாதகமானதை எதிர்க்கவும்பின் நிற்கலாகாது.

# பவுலும் ஜெபமும்

## (PAUL AND PRAYER)

வண. டாக்டர் ஜேம்ஸ் மேதர்

பவுல் அப்போஸ்தலனுடைய சீவியத்தை நாம் ஆராய்ந்து படிக்கும்பொழுது, அவர் செபத்தில் ஒரு பெரிய மனுஷன் என்று காண்கிறோம். (A great man in Prayer). அப்போஸ்தலரின் நடபடிகள் 9 : 1 - 9 இல் அவருடைய ஆச்சரியமான குணப்படுதலைப் பற்றிச் சொல்லியிருப்பது உங்களுக்குத் தெரியும். அவர் குணப்பட்டபின், அவரைப் பற்றி வாசிக்கும் முதல் காரியம், அதே அதிகாரம் 11 ஆம் வசனம், "அவன் இப்பொழுது செபம் பண்ணுகிறான்" குணப்பட்ட சீவியத்தின் ஆரம்பம், செபம்.

